அல்லாஹ் நிர்ணயித்த விதியின் விஷயத்தில் விவாதம் கொள்ளக்கூடாது

அல்லாஹ் நிர்ணயித்த விதி என்பது அல்லாஹ்வின் மறைவான இரகசியங்களில் ஒன்றாகும். அதில் நாம் இரகசியங்களைப் பின்தொடர முயற்சிக்கக் கூடாது. அல்லாஹ் எல்லாவற்றையும் அறிபவன், அவன் நீதி வழங்குபவன், அநீதியிலிருந்து அப்பாற்பட்டவன், அவன் எந்த ஒன்றையும் தேவையின்றி வீணான வகையில் செய்வதில்லை, அவன் ஞானம் படைத்தவன், அவனுடைய ஒவ்வொரு செயலும் அவனுடைய பூரண ஞானத்தின் அடிப்படையிலானது என்பது நம்முடைய ஈமான். இருப்பினும், அவனுடைய ஞானத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியாது. ஆகவே, இவ்விஷயத்தில் எதையும் ஆழ்ந்தறிய முற்படுவதைவிட சிறந்தது இறைத்தூதர் ﷺ அவர்களுடைய கட்டளையைப் பின்பற்றுவதேயாகும் وَإِذَا ذُكِرَ الْقَدْرُ فَأَمْسِكُوْا அல்லாஹ் நிர்ணயித்த விதியைப்பற்றிப் பேசப்படும்போது ஒன்றுமே பேசாதீர்கள், அத்துடன் நின்றுவிடுங்கள். (தபரானி). இதுபோன்றே, ஹஜ்ரத் அபூஹுரைரஹ் (ர) அவர்கள் அறிவிக்கின்றார்கள், நாங்கள் அல்லாஹ் நிர்ணயித்தவிதியைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம், இறைத்தூதர் ﷺ அவர்கள் வந்தார்கள், எங்களுடைய பேச்சுக்களைக்கேட்டுக் கோபமடைந்தார்கள், எந்த அளவிற்கு என்றால் அவர்களுடைய ﷺ முகம் சிவந்துவிட்டது, அவர்களுடைய முகத்தின்மீது மாதுளைப்பழச்சாறு பூசப்பட்டதுபோன்றாயிற்று. அவர்கள் ﷺ கூறினார்கள், இதுவா உங்களுக்குக் கட்டளையிடப்பட்டது? இதற்காகவா நான் உங்களுடைய நபியாக அனுப்பப்பட்டுள்ளேன்? உங்களுக்கு முன்பிருந்தவர்கள் இவ்வாறான விவாதங்களின் காரணமாகவே அழிக்கப்பட்டனர். நான் உங்களுக்கு மிகக்கடுமையாக எச்சரிக்கின்றேன், இவ்விஷயத்தில் ஒருபோதும் விவாதத்தை மேற்கொள்ளாதீர்கள் (திர்மிதி)

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

لَا يُؤْمِنُ عَبْدٌ حَتَّى يُؤْمِنَ بِالْقَدَرِ خَيْرِهِ وَشَرِّهِ، حَتَّى يَعْلَمَ أَنَّ مَا أَصَابَهُ لَمْ يَكُنْ لِيُخْطِئَهُ، وَأَنَّ مَا أَخْطَأَهُ لَمْ يَكُنْ لِيُصِيبَهُ (ابن ماجة)

பொருள்: எந்த ஒரு அடியானும் அல்லாஹ் நிர்ணயித்த விதிகளின்மீது, நல்லவை தீமையானவை அனைத்தின்மீதும் ஈமான் கொள்ளாதவரையிலும் அவனுக்கு நிகழும் அனைத்தும் நிகழ்ந்தே தீரவேண்டியவையே என்றும், எவை நிகழவில்லையோ அவை நடக்கக்கூடியவையே அல்ல என்றும் ஈமான் கொள்ளதாவரை அவன் முஃமினாக ஆகாட்டான் (இப்னு மாஜா). ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்களிடம் ஒரு திருடன் கொண்டுவரப்பட்டான். அவனிடம் அவர்கள் (ர) கேட்டார்கள் நீ ஏன் திருடினாய்? திருடன் பதில் கூறினான், நான் என்ன செய்வேன், அல்லாஹ் எனக்காக இதனையே விதியாக்கியிருக்கின்றான். ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப்

www.lizaifalahi.com

(ர) அவர்கள் ஆணையிட்டார்கள், அவனுக்கு முப்பது சாட்டையடி அடியுங்கள், அதன்பின் அவனுடைய கை வெட்டிவிடுங்கள். அவர்களிடம் (ர) கேட்கப்பட்டது, இரண்டு வகையான தண்டனைகள் கொடுக்கப்பட்டுள்ளன, இவ்வாறு ஏன்? அவர்கள் (ர) பதில் கூறினார்கள், அவனுடைய கை வெட்டப்படவேண்டியது அவன் திருடியதற்காக, சாட்டையடிகள் கொடுக்கப்படவேண்டியது அவன் அல்லாஹ்வைப் பொய்யாக்கியதற்காக. இந்த சம்பவத்தின் மூலம் தவறான, பாவச்செயல்களுக்கெல்லாம் நாம் அல்லாஹ் நிர்ணயித்த விதியென்று ஆதாயம் தேடிக்கொள்ளக்கூடாது என்பதை அறிய முடிகிறது. பாவச்செயல்களுக்காக அல்லாஹ்வையே காரணமாக்குவது உண்மையில் அல்லாஹ்வைப் பொய்யாக்குவதாகும். மாறு செய்வதற்காக விதியை ஆதாரமாகக் கூறக்கூடாது.

உண்மை யாதெனில், ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் முழு உரிமையும் சுதந்திரத்தையும் பெற்றுள்ளவனாக இருக்கிறான். அவன் நினைத்தால் இதையும் செய்யலாம் அதையும் செய்யலாம். சந்தேகத்திற்கே இடமில்லாத வகையில் அல்லாஹ் தஆலா நன்மையானவற்றைச் செய்யும்படி கட்டளையிட்டுள்ளான் மற்றும் அவற்றை நிறைவேற்றும் வகையிலான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளான், அவ்வாறே தீமையானவற்றிலிருந்து தடுத்துள்ளான் மற்றும் அவற்றிற்கான தண்டனையைப்பற்றி எச்சரிக்கையும் செய்துள்ளான். ஆனால், விதியின் விஷயம் என்னவெனில், அது அல்லாஹ்வின் ஞானம் மற்றும் அவனுடைய முடிவினை ஆதாரமாகக் கொண்டது, அதனை மனிதன் அறிவதுமில்லை, அதனைப்பற்றி அடுத்த நிமிடம் என்ன நிகழப்போகின்றது என்று அவன் தெரிந்துகொள்ளும் வாய்ப்பும் இல்லை. அவன் ஒன்றைச் செய்யும்போது முழுமையாகவே சுதந்திரமாகச் செயல்படும் நிலையிலும் தேர்ந்தெடுக்கும் முழு உரிமையும் பெற்றவனாகவே இருக்கின்றான், இதுவே அவனுடைய சோதனைக்கான நேரமாகும். இந்நிலையில், அவன் தாமாகவே சுதந்திரமாகச் செய்த ஒன்றைப் பற்றி விதியின்மீது பழியைச் சுமத்தி எல்லாவிதமான தீய செயல்களையும் தமக்கு ஆகுமானவையாகவே ஆக்கிக்கொள்வது எவ்வாறு பொருந்தும்? மனிதன் தன்னுடைய எண்ணம் மற்றும் செயல்களில் சுதந்திரமாகச் செயல்படும் உரிமைபெற்றவன் என்ற வகையில் அவனுடைய செயல்களுக்கெல்லாம் அவனே பொறுப்பானவனாவான், அல்லாஹ் நிர்ணயித்த விதி என்று கூறி தட்டிக்கழிப்பது அல்லாஹ்வின்மீது பொய் சுமத்துவதாகும். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

سَيَقُولُ ٱلَّذِينَ أَشْرَكُوا۟ لَوْ شَآءَ ٱللَّهُ مَآ أَشْرَكْنَا وَلَآ ءَابَآؤُنَا وَلَا حَرَّمْنَا مِن شَىْءٍ ۚ كَذَٰلِكَ كَذَّبَ ٱلَّذِينَ مِن قَبْلِهِمْ حَتَّىٰ ذَاقُوا۟ بَأْسَنَا ۗ قُلْ هَلْ عِندَكُم مِّنْ عِلْمٍ فَتُخْرِجُوهُ لَنَآ ۖ إِن تَتَّبِعُونَ إِلَّا ٱلظَّنَّ وَإِنْ أَنتُمْ إِلَّا تَخْرُصُونَ ﴿١٤٨﴾ **(الأنعام:148)**

பொருள்: இணை வைப்பாளர்கள் நிச்சயம் கூறுவார்கள், அல்லாஹ் நாடியிருந்தால் நாங்கள் இணை வைத்திருக்கமாட்டோம், எங்கள் மூதாதையர்களும் இணை வைத்திருக்கமாட்டார்கள், மேலும், நாங்கள் எப்பொருளையும் தடை செய்திருக்கமாட்டோம். இவர்களுக்கு முன் சென்றவர்களும் இவ்வாறு கூறித்தான் சத்தியத்தைப் பொய்யெனக் கூறிக்கொண்டிருந்தார்கள். இறுதியில் நம்முடைய வேதனையின் சுவையை அவர்கள் அனுபவித்தார்கள். இவர்களிடம் நீர் கூறும், அறிவுப்பூர்வமான ஆதாரம் ஏதேனும் உங்களிடம் உண்டா? இருந்தால், அதனை எங்களுக்குமுன் எடுத்து வையுங்கள். நீங்கள் வெறும் யூகத்தைத்தான் பின்பற்றிச் செல்கின்றீர்கள், மேலும், நீங்கள் கற்பனையின் அடிப்படையிலேயே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றீர்கள் (அல் அன்ஆம்:148)

மற்றொரு இடத்தில் அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَقَالُواْ لَوۡ شَآءَ ٱلرَّحۡمَٰنُ مَا عَبَدۡنَٰهُمۗ مَّا لَهُم بِذَٰلِكَ مِنۡ عِلۡمٍۖ إِنۡ هُمۡ إِلَّا يَخۡرُصُونَ ﴿٢٠﴾ **(الزخرف:20)**

பொருள்: மேலும், இவர்கள் கூறுகிறார்கள் (நாங்கள் அவர்களை வணங்கக் கூடாது என) கருணைமிக்க இறைவன் நாடியிருந்தால், ஒருபோதும் நாங்கள் அவர்களை வணங்கியிருக்கமாட்டோம். இந்த விவகாரத்தில் யதார்த்த நிலையை அவர்கள் உறுதியாக அறிந்திருக்கவில்லை. இவர்கள் வெறும் ஊகங்களிலேயே உழன்றுகொண்டிருக்கின்றார்கள் (அஸ்ஸுக்ஹ்ருஃப்:20).

ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்களுடைய காலத்தில் சீரியா நாட்டில் கொள்ளைநோய் பரவியது, அக்காலக்கட்டத்தில் அவர்கள் அங்கேயே சென்றிருந்தார்கள், அங்கிருந்து புறப்பட்டுச்செல்லவேண்டும் என்று அவர்கள் முடிவு செய்தபோது, ஹஜ்ரத் அபூ உபைதஹ் (ர) அவர்கள் கூறினார்கள், அமீருல் முஃமினீன் அவர்களே, நீங்கள் அல்லாஹ் நிர்ணயித்த விதியிலிருந்து தப்பி ஓடும் வழியினையா மேற்கொள்ளப்போகிறீர்கள்? ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்கள் பதில் கூறினார்கள், ஆம், அல்லாஹ் நிர்ணயித்த விதியிலிருந்து அல்லாஹ் நிர்ணயித்த விதியின்புறமாக. கொள்ளை நோய் ஒரு வியாதியாகும், இது அல்லாஹ் நிர்ணயித்த விதியின் பகுதியாகவே இருக்கின்றது. உமர் (ர) அவர்கள் ஹஜ்ரத் அபூ உபைதஹ் (ர) அவர்களுக்கு ஒரு உதாரணத்தைக் கூறினார்கள், ஒரு நிலப்பகுதி கட்டாந்தரையாக உள்ளது, அங்கே தண்ணீர் இல்லை, புற்பூண்டுகளும் இல்லை செடிகொடிகளும் இல்லை. ஒரு மேய்ப்பாளன் அந்த இடத்தைவிட்டு புற்பூண்டுகளும் செடிகொடிகளும் உள்ள ஒரு இடத்திற்குச் செல்கிறான். இதன் பொருள் என்னவெனில், அவன் அல்லாஹ் நிர்ணயித்த ஒரு விதியின் புறத்திலிருந்து புறப்பட்டு அவனால் விதிக்கப்பட்ட மற்றொரு விதியின்புறமாக இடம் மாறிச் செல்கின்றான். ஒரு விதியை மற்றொரு விதியினால் நீக்கிக்கொள்வது நம்முடைய ஈமானின் பகுதியாகும். நோய்களையும் அல்லாஹ்தான் படைத்தான், அந்த நோய்களுக்கான மருந்தினையும் அவனே படைத்துள்

www.uzairfalahi.com

ளான். இறைத்தூதர்ﷺ அவர்களிடம் கேட்கப்பட்டது, இறைத்தூதரே, ﷺ நாங்கள் நோய்வாய்ப்படும்போது மருந்தினைப் பயன்படுத்தலாமா அல்லது இறைவசனங்கள் ஓதி ஊதிக்கொள்ளலாமா அல்லது வேறு ஏதும் வழிவகையான பாதுகாப்பு முறையை மேற்கொள்ளவேண்டுமா? இறைத் தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள், ஆம், இதுவும் அல்லாஹ் நிர்ணயித்த விதி யின் பகுதியாகும். மற்றொரு நபிமொழியில் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

تَدَاوَوْا عِبَادَ اللَّهِ، فَإِنَّ اللَّهَ لَمْ يَضَعْ دَاءً إِلَّا وَضَعَ مَعَهُ شِفَاءً، إِلَّا الْهَرَمَ (أحمد)

பொருள்: அல்லாஹ்வின் அடியார்களே, நீங்கள் நோய் நிவாரணத்திற் காக சிகிச்சையை மேற்கொள்ளுங்கள், நிச்சயமாக அல்லாஹ் தஆலா எந்த ஒரு வியாதியைப் படைத்தாலும் அதற்கான நிவாரணத்தையும் படைத்துள் ளான், வயோதிகத்தைத்தவிர (அஹ்மத்). ஆற்றல் மற்றும் வசதி இருந்தும் விதியினைக் காரணம் காட்டி ஒருவன் ஒன்றும் செய்யாமலேயே இருந்து பாதிப்புகளை ஏற்படுத்திக்கொள்வானேயானால் அவன் குற்றவாளியாகக் கருதப்படுவான். விதியைக் காரணம்காட்டி ஒருவன் தன்னுடைய பசியைப் போக்கிக்கொள்ள எந்த முயற்சியும் மேற்கொள்ளாது பசியால் இறந்துவிட் டான் என்றால் அவன் ஹராமான வகையில் மரணிப்பதாக ஆகிவிடும். செயல்களில் நன்மையானவை தீமையானவை என்பது அவை முற்றுப் பெறும் விதத்தின் அடிப்படையில் அமைகின்றது. ஒருமனிதனுடைய செயல் களின் இறுதிக்கட்டம் நன்மையை நாடும் வகையில் அமையுமானால் அவ னுக்காக நற்செய்திகள் உண்டு, மாறாக, தீமையை நாடுவதாக இருக்குமா னால் நிச்சயமாக அவனுக்கு அதன் பாதிப்பும் தண்டனையும் கிடைத்தே தீரும். நபிமொழியில் கூறப்பட்டுள்ளது:

إِنَّ أَحَدَكُمْ يُجْمَعُ فِي بَطْنِ أُمِّهِ أَرْبَعِينَ يَوْمًا، ثُمَّ يَكُونُ عَلَقَةً مِثْلَ ذَلِكَ، ثُمَّ يَكُونُ مُضْغَةً مِثْلَ ذَلِكَ، ثُمَّ يَبْعَثُ اللَّهُ إِلَيْهِ مَلَكًا بِأَرْبَعِ كَلِمَاتٍ، فَيُكْتَبُ عَمَلُهُ، وَأَجَلُهُ، وَرِزْقُهُ، وَشَقِيٌّ أَوْ سَعِيدٌ، ثُمَّ يُنْفَخُ فِيهِ الرُّوحُ، فَإِنَّ الرَّجُلَ لَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ النَّارِ، حَتَّى مَا يَكُونُ بَيْنَهُ وَبَيْنَهَا إِلَّا ذِرَاعٌ، فَيَسْبِقُ عَلَيْهِ الكِتَابُ فَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ الجَنَّةِ فَيَدْخُلُ الجَنَّةَ، وَإِنَّ الرَّجُلَ لَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ الجَنَّةِ، حَتَّى مَا يَكُونُ بَيْنَهُ وَبَيْنَهَا إِلَّا ذِرَاعٌ، فَيَسْبِقُ عَلَيْهِ الكِتَابُ، فَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ النَّارِ، فَيَدْخُلُ النَّارَ

பொருள்: உங்களில் ஒவ்வொருவருடைய படைப்பும் தன்னுடைய தாயின் வயிற்றில் கருவாக நாற்பது நாட்களில் ஒன்று சேர்க்கப்பட்டு, அதன் பிறகு, அதே கால அளவில் இரத்தக்கட்டியாக மாறி நிலைத்திருந்து, பின்பு அதே கால நேரத்தில், ஒரு மாமிசத் துண்டாக உருவாகிவிடுகிறது. அதன்பின், அல்லாஹ் தஆலா அவனிடத்தில் ஒரு வானவரை நான்கு விஷயங்களைக் கட்டளையிட்டு அனுப்புகிறான். அவர் அவனுடைய செயல்கள், அவனு டைய மரணம்,அவனுடைய வாழ்வாதாரங்கள் மற்றும் அவன் பாக்கியசாலி

www.uzairfalahi.com

யானவன் அல்லது துர்ப்பாக்கியசாலி என்று விதிக்கப்பட்டடுள்ளதை எழுதி விடுகின்றார், அதன்பின், அதில் உயிரூட்டப்படுகின்றது. எவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லையோ அவன்மீது சத்தியமாக, உங்களில் ஒருவன் வாழ்நாள் முழுவதும் நரகத்திற்குரியவனாகவே செயல்பட்டுகொண்டிருப்பான், அவனக்கும் நரகத்திற்கும் இடையில் ஒரு முழ அளவிற்கு மட்டுமே இடைவெளி இருந்துவிடுகின்றது. ஆனால், அவனைப் பற்றி விதியில் எழுதப்பட்டது வந்து சேர்கின்றது, பின்பு அவன் பாவ மன்னிப்புக்கோரி சுவர்க்கத்திற்குரியவர்களைப்போன்று செயல்களைச்செய்யத்துவங்குகின்றான், அதன் காரணமாக, அவன் சுவர்க்கத்திலேயே சென்றடைந்துவிடுகின்றான். அவ்வாறே, ஒருவன் வாழ்நாள் முழுவதும் சுவர்க்கத்திற்குரியவனாகவே செயல்பட்டுகொண்டிருப்பான், அவனுக்கும் சுவர்க்கத்திற்கும் இடையில்ஒரு முழ அளவிற்கு மட்டுமே இடைவெளி இருந்துவிடுகின்றது. ஆனால், அவனைப் பற்றி விதியில் எழுதப்பட்டது வந்து சேர்கின்றது, பின்பு அவன் நரகத்திற் குரியவர்களைப்போன்று செயல்களைச் செய்யத்துவங்குகிறான், அதன் காரணமாக அவன் நரகத்திலேயே சென்றடைந்து விடுகின்றான்.

www.tuaifalahi.com

சுவர்க்கம், நரகம் ஆகியவையும் ஒருவருடனேயே இணைந்தும் அவனுடைய செயல்களைச்சார்ந்தும் உள்ள நிலையில், ஒரு முஃமினுடைய அணுகுமுறை நன்மைகளை அதிக அளவில் செய்துகொண்டும் ஒரு கணமும் வீணாகாத வகையில் பார்த்துக்கொள்வதைத்தவிர வேறு என்னவாக இருக்கமுடியும்? மரணத்தைப்பற்றிய உத்திரவாதம்தான் என்ன, அது தன்னுடைய நேரத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கின்றது, அது எப்போதும் வரலாம். ஒவ்வொருவரும் தன்னுடைய ஆற்றல்களுக்கேற்ப நற்காரியங்களைச் செய்ய முயற்சிக்கவேண்டும், அவ்விஷயத்தில் ஒரு நிமிடமும் வீணாக்காமல் முடிவை அல்லாஹ்வின்மீது விட்டுவிடவேண்டும். அல்லாஹ் தஆலா எவர்மீதும் அவருடைய ஆற்றல்களுக்கு அதிகமாக பாரத்தைப் போடுவதில்லை.

இந்த நல்வாய்ப்பு எவ்வளவு மகத்தானது, ஒரு அடியான் பாவங்களில் மூழ்கி இருக்கின்றான், அவன் நரகத்தின் வாயில் வரை சென்றடைந்துவிடுகிறான், திடீரென ஒரு கணத்தில் அவன் அல்லாஹ்வின் புறமாகத் திரும்பி தன்னுடைய பாவங்களிலிருந்து விலகி, பாவமன்னிப்புக்கோரி நற்காரியங்களைச் செய்ய முற்படுகிறான், இறுதியில் அவன் சுவர்க்கத்திற்குள் செல்லும் தகுதியும் பெற்றுவிடுகிறான். இந்த நல்வாய்ப்பு முற்றிலும் அல்லாஹ்வின் கருணை மற்றும் அவனுடைய பேரருளும் பாக்கியமுமாகும். ஒவ்வொருவரும் இந்த வாய்ப்பினைத்தள்ளிப்பபோடாமல் பயன்படுத்திக்கொண்டவர்களாக தூயமனதுடன் பாவமன்னிப்புக்கோரி அவனுடைய முடிவு நன்மையானதாகவே அமையும் வகையில் நற்காரியங்களைச்செய்ய மன உறுதியுடன் முற்படவேண்டும்.

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

لاَ يَرُدُّ الْقَدْرَ إِلاَّ الدُّعَآءُ

பொருள்: அல்லாஹ் நிர்ணயித்த விதியினை துஆவைத்தவிர எதுவும் மாற்றி விடுவதில்லை. (திர்மிதி, ஹாகிம்). துஆவுக்காக அல்லாஹ்வின் வாயில் எப்போதுமே திறந்திருக்கும். பாவங்களிலிருந்து மன்னிப்புக்கோரி நற்காரியங்களைச் செய்ய அருள் புரியுமாறு கேட்கப்படும் துஆவின் காரணமாக சுவர்க்கம் உங்களுக்காக இரண்டு காலடி தூரத்தில் காத்துக்கொண்டிருக்கும். இவ்விஷயத்தில் முந்திக்கொள்ளவேண்டும், இல்லையெனில், பாவமன்னிப்பு மற்றும் இவ்வாறு துஆ கேட்டுப்பயனடையும் அவசகாமே இல்லாது போய்விடும், வாழ்க்கையைப்பற்றிய உத்திரவாதம்தான் என்ன?

அல்லாஹ் நிர்ணயித்த விதி ஒரு மனிதனுடைய கால்களைக் கட்டிப்போடும் சங்கிலி அல்ல, மாறாக, அது நம்பிக்கை மற்றும் வாய்ப்புக்களின்புறம் வழி நடத்தும்ஒளிவிளக்கு. இது நற்காரியங்களைத் தட்டிக்கழிக்க விதியையே காரணம் காட்டுவது அல்ல, முழு முயற்சி மற்றும் நற்காரியங்களுக்காகத் தூண்டுதலாக இருக்கும் ஒன்றாகும். இது மனிதர்களை நம்பிக்கையின்மையிலிருந்து விலக்கி நம்பிக்கைக்குரியப் பிரதான பாதையில் கொண்டு செல்லும். ஹஜ்ரத் அலி (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள், உங்களில் ஒவ்வொருவருடைய இறுதியான இருப்பிடமும் அவருடைய ஈமான் மற்றும் நற்காரியங்களின் அடிப்படையிலேயே அது சுவர்க்கமா அல்லது நரகமா என்பது எழுதப்பட்டுவிட்டுள்ளது. நபித்தோழர்கள் கேட்டார்கள், இறைத்தூதர் ﷺ அவர்களே, அவ்வாறாயின், நாங்கள் நற்காரியங்கள் செய்வதை விட்டுவிட்டு ஏன் விதியின் அடிப்படையிலான அந்த முடிவுக்காக நிம்மதியுடன் காத்திருக்கக்கூடாது? அதற்கு இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், நீங்கள் நற்காரியங்களைச் செய்துகொண்டிருங்கள், ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் எதற்காகப் படைக்கப்பட்டிருக்கின்றானோ அதற்கான வழி எதுவோ அதுவே அவனுக்காக எளிதாக்கித்தரப்படுகின்றது. அவன் நற்பாக்கியமுடையவனாக இருப்பானேயானால் அவனுக்கு பாக்கியங்கள் மற்றும் வெற்றிக்கான பாதையினை மேற்கொள்வது எளிதானதாக ஆக்கப்படும், மாறாக, அவன் துர்ப்பாக்கியமுடையவனாக இருப்பானேயானால் அவனுக்கு துர்ப்பாக்கியம் மற்றும் கைசேதத்திற்கான பாதையினை மேற்கொள்வது எளிதானதாக ஆக்கப்படும், அதன்பின் அவர்கள் ﷺ இந்த வசனத்தை ஓதிக்காண்பித்தார்கள்:

فَأَمَّا مَنْ أَعْطَىٰ وَاتَّقَىٰ ﴿٥﴾ وَصَدَّقَ بِالْحُسْنَىٰ ﴿٦﴾ فَسَنُيَسِّرُهُ لِلْيُسْرَىٰ ﴿٧﴾ وَأَمَّا مَنْ بَخِلَ وَاسْتَغْنَىٰ ﴿٨﴾ وَكَذَّبَ بِالْحُسْنَىٰ

﴿٩﴾ فَسَنُيَسِّرُهُ لِلْعُسْرَىٰ ﴿١٠﴾ (الليل:5-10)

www.uzaifalahi.com

பொருள்: எனவே, எவர் (இறைவழியில்) பொருளை வழங்கினாரோ, மேலும், இறைவனுக்கு மாறு செய்வதிலிருந்து விலகியிருந்தாரோ, நன்மையை உண்மையென ஏற்றுக்கொண்டாரோ, அவருக்கு இலகுவான வழியில் செல்வதற்கு நாம் வகை செய்வோம். எவர் கஞ்சத்தனம் செய்கின்றாரோ, மேலும், தன் இறைவனைப் பொருட்படுத்தாமல் நடந்தாரோ, அவருக்குக் கடினமான வழியில் செல்வதற்கு நாம் வகை செய்வோம். (அல் லைல்:5-10)

அல்லாஹ் நிர்ணயித்த விதியினைப்பற்றிய இந்த விளக்கத்தைத்தான் இறைத்தூதர் ﷺ அவர்கள் நபித்தோழர்களுக்கு விளக்கிக்கூறியிருக்கின்றார்கள், இதன்மீது செயல்பட்டதன் காரணமாகவே அவர்கள் இவ்வுலகிலும் மறுமையிலும் அனைத்து பாக்கியங்களையும் வெற்றி மற்றும் ஈடேற்றத்தையும் பெற்று விளங்கினர்.

* * *

www.uzairfalahi.com